DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 130/2024
Deposition of Witness for : PW 4

| | |
|---|---|
| Name. | திரு. மனோஜ் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 26.11.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் மதுராந்தகத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் இரண்டு எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் இரண்டு கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை எப்பொழுது போட்டேன் என்று ஞாபகம் இல்லை. கேமரா திருடப்பட்டதற்காக மதுராந்தகம் போலிசார் கேட்டதற்காக மருத்துவமனை சாலையில் வைத்துபோட்டுக் கொடுத்தேன். அப்பொழுது நான்கு நபர்கள் அங்கு இருந்தார்கள் . அந்த நான்கு நபர்கள் தற்பொழுது நீதிமனற்த்தில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஒப்புதல் வாக்கமூலங்கள் மற்றும் கைனப்பற்றுதல் மகசர்களில் உள்ள என்னுடைய கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ. 2 முதல் 5 ஆகும்.

( அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) மேற்சொன்ன கையொப்பங்களை எதிரிகளை மதுராந்தகம் காவல் துறையினர் அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் எதிரிகள் யார் என்றே எனக்கு தெரியாது. என் முன்னியில் எதிரிகளிடம் இருந்து தொகை ரூ.15,000/–மும், 13 செ.மீ நீளமுள்ள இரும்பினாலான கத்தியையும் கைப்பறினார்கள் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் உண்மை விவரங்கள் கூறி தற்பொழுது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.